2016

2016 501658

No. of Printed Pages : 5

**5911**

Register Number

இரண்டாமாண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** (அ) **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

**1.** 'மனவுறுதி' - இச்சொல்லைப் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.

**2.** கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாகும்
வேட்ப மொழிவதாம் சொல்

- என்னும் குறளில் 'வேட்ப'என்னும் சொல் எதனடியாகப் பிறந்தது? அவ்வடிச் சொல் குறிப்பிடும் பொருள்களை எழுதுக.

**3.** குறிப்பு வினைமுற்று என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

**4.** நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

- இக்குறட்பாவின் கருத்தினைக் கூறி, அதனை அணியோடு பொருத்திக் காட்டுக.

**5.** 'முன்னிலை எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தேடிப்படிக்கும் பழக்கத்தை மாணவ ஆசிரியர்கள் உருவாக்கிக்கொள்ள வேண்டும்' - காரணம் கூறுக.

**6.** பேச்சாற்றல் போர் ஆற்றலினும் போற்றத்தக்கது என்பதனை உணர்த்தும் திருக்குறளினை எழுதுக.

[ Turn over

7. 'சிலந்தி சிரித்தது' - என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?
   - இக்கதையின் மையக்கருத்து என்ன?

8. மதிமுகம் வந்தாள் - இச்சொற்றொடரில் வரும் தொகையினைக் கூறி, அத்தொகைச் சொல்லிற்கான இலக்கணத்தையும் கூறுக.

9. இது பொறுப்ப தில்லை - தம்பி!
   எரிதழல் கொண்டு வா,
   கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
   கையை எரித்திடுவோம்.

   -இப்பாடல் உணர்த்தும் நயத்தை வெளிப்படுத்துக.

10. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

    ஓரறிவுடைய புற்பூண்டுகள் முதல் ஆறறிவுடைய மக்கள் ஈறான பல கோடி உயிர்களுள் மக்கட் பிறவியே சிறந்தது என்பது எல்லார்க்குந் தெரிந்த உண் மையன்றோ! ஏனெனில் ஆறாவதான பகுத்தறிவு மக்கட் பிறவியெடுத்த உயிர் கட்குப் பேரளவினதாய் அமைந்தாற்போல ஏனைச் சிற்றுயிர்கட்கு அமைய வில்லை.

    - மறைமலையடிகள்

    (a) இப்பத்தியின் மையக் கருத்து யாது?
    (b) இப்பத்தி உணர்த்தும் செய்தி யாது?

(ஆ) எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

11. நாலாயிரம் காண்டகு - இச்சொற்களைப் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.

12. அள்ளற் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
    வெள்ளம்தீப் பட்ட தெனவெரீஇ - புள்ளினம்தம்
    கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
    நச்சிலைவேல் கோக்கோதை நாடு
    - இப்பாடல் உணர்த்தும் பொருளை விளக்கி அருஞ்சொற்களை எடுத்தெழுதுக.

13. தகுதி வழக்கின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

14. கவிதை எழுதும் திறனை மாணவர்களிடையே வளர்க்க நீவிர் எத்தகைய பயிற்சிகளை வழங்குவீர்?

15. கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தம்பி! இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பகுதியில் ஒன்றை மட்டும் போற்றுகிறவன் உருப்படியாவதில்லை. உடலை மட்டும் போற்றி உரமாக வைத்திருப்பவனும் அழிகிறான். அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகையாகி அவனைத் தீய வழியில் செலுத்திக் கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தை மட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்றுகிறவனும் இடைநடுவே அல்லல்படுகிறான். அவனுடைய உள்ளத்தின் அமைதியைக் கெடுத்து அல்லல்படுகிறது. உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயர வேண்டியதாக இருக்கலாம். ஆனால் தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாது. வானைப் புறக்கணித்துக் கிளைகளை உயர்த்தாமல் வாழவும் முடியாது.

(i) இப்பத்தியின் மையக் கருத்து யாது?

(ii) இப்பத்தியில் உள்ள அருஞ்சொற்களை எழுதுக.

(iii) இப்பத்தியிலுள்ள நயங்களை எழுதுக.

(iv) இப்பத்திற்கு பொருத்தமான தலைப்புத் தருக.

16. செய்யுள் நயம் பாராட்டுக.

செங்கதிரோன் மலையிடையில் செம்மை தேக்கும்
செடிகொடிகள் பொன்பூக்கும்; திரும்பும் புட்கள்
மங்கிவரும் ஒளிக்கெதிரே மேற்கு வானில்
மையிருட்டுக் கைந்நீட்டும்; வானம் பூத்துத்
தொங்குகின்ற பீர்க்கம்பூப் போலக் கண்முன்
தொடுவானில் கீழ்த்திசையில் ஒளியில் மங்கி
அங்கொன்றும் இங்கொன்றும் முன்னர்த் தோன்றி
அடுத்தநொடி வான்நிறையும் விண்மீன் கூட்டம்!

17. வேற்றுமைத் தொகை, உம்மைத் தொகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

18. பேச்சாற்றலை வளர்க்கும் வழிமுறைகளை எவ்வாறு மேற்கொள்வீர்?

[ Turn over

## பகுதி - ஆ

II. (அ) அனைத்து வினாக்களுக்கும் **ஒவ்வொன்றிற்கும்** 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

19. பாடத்திட்டம் - வரையறுக்க.

20. சங்கீத உபந்நியாசம், விவசாயம், கோஷ்டி, கஜானா - இச்சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை எழுதுக.

21. அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்தும் சொற்களஞ்சியம் என்றால் என்ன?

22. கட்டுரை எழுதுதல் உயர் நிலைத் திறனாக மதிக்கப்பட காரணமென்ன?

23. வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

24. ''அது நமக்கு அடுப்பு எரியப் பயன்படும்'' - இச்சொற்றொடரில் ஏற்பட்ட பிழைக்கான காரணத்தைக் கூறி, பிழையின்றி எழுதுக.

25. ஒற்றுப்பிழைகளைக் களைய வகுப்பறையில் நீவிர் மேற்கொள்ளும் பயிற்சிகளைக் கூறுக.

26. குழந்தைகளுக்கான இணையத் தளங்கள் நான்கினைக் கூறுக.

27. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்புத் தன்மைகள் யாவை?

28. மதிப்பீடு என்றால் என்ன? தற்போது பள்ளிகளில் எத்தகைய மதிப்பீட்டு முறை பின்பற்றப்படுகிறது?

(ஆ) எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

29. பாடநூல் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும்?

30. சொற்களஞ்சியம் பெருக்கும் உத்திகள் எவையேனும் நான்கினைச் சான்றுடன் விளக்குக.

31. நவதானியங்கள், ஐம்புலன்கள் - தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

32. மாணவர்களிடம் படைப்பாற்றலை வளர்க்கும் பயிற்சிகளில் நான்கினைப் பற்றி எழுதுக.

33. மாணவர்கள் தமிழைக் கற்கும்போது செய்யும் பிழைக்கான காரணங்களை விளக்குக.

34. மாணவர்களிடம் காணப்படும் எழுத்துப் பிழைகளைக் களைய எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வீர்?

35. 'கணினிவழிக் கல்வியின் வாயிலாக மொழிப்பாடத்தைச் சிறப்பாகக் கற்பிக்க இயலும்' - கூற்றினை நிறுவுக.

36. மொழி வல்லமைத் தேர்வு என்றால் என்ன? அதன் நிறைகளைப் பட்டியலிடுக.

## பகுதி - இ

**III.** ஒவ்வொரு வினாவிற்கும் **500** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. **2x10=20**

37. (அ) கலைத் திட்டம் என்றால் என்ன? கலைத்திட்டத்தின் இயல்புகளைத் தொகுக்கவும்.

**அல்லது**

(ஆ) தொடை என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

38. (அ) தமிழ்மொழி வளர்ச்சியில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பங்கினை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) வினாத்தாள் அமைக்கும் முறை, தயாரிக்கும் முறை மற்றும் வினாத்தாள் வடிவமைப்பு முறைகளைத் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

-oOo-